From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.188/2010

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | :Balaji | Father/Husband Name: Rajasekaran | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | :Inspector |
| Religion | : | Age | : |
| Date | :15.11.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.01.10-ம் தேதி மதுரை மாவட்டம் மேலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேலூர் காவல் நிலைய குற்ற எண். 17-10 இதச பிரிவு 392-ன்படி சார்பு ஆய்வாளர் கிருஷ்ணன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை பார்வையிட்டு சம்பவ இடம் அன்றையதினமே சென்று சாட்சிகள் சாகுல்ஹமீது முருகன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான மல்லிகாபுளோரா, அர்னால்டுசாலமோன், கிரேசிசோபியாபாய், சத்தியமூர்த்தி, சாகுல்ஹமீது மற்றும் முருகன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தகவலின்பேரில் 16.03.10ம் தேதி 16 மணிக்கு மேலூர் காவல் நிலைய குற்ற எண். 38-10 பிரிவு 392 இதச வழக்கு சம்மந்தமாக அந்நிய சந்தேக நபர்களை கண்காணித்துக்கொண்டு மதுரை நான்குவழிச்சாலை தெற்குப்பட்டி பைபாஸ் சாலையில் வாகனத் தணிக்கை செய்துகொண்டிருந்தபோது சாலையில் கிழக்கேயிருந்து மேற்கு முகமாக டி.என்.59 டபுள்யு 6760 என்ற பதிவெண் கொண்ட ஹீரோஹோண்டா ஸ்பிலண்டர் மற்றும் டி.என்.58 ஜெ 8870 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை தடுத்து நிறுத்த நிறுத்துவதுபோல் நிறுத்தி தப்ப முயன்றவர்களை வளைத்து பிடித்து விசாரிக்க பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த காட்டுராஜா, ராஜேஷ், முருகன், வீரணன் என்ற கவாஸ்கர் முன்னுக்குப்பின்

முரணாக பதில் கூறியும் இறுதியாக உண்மையான விலாசத்தை கூறியவர்களை எனது அழைப்பின்பேரில் வந்த சாட்சிகள் சேட்பாபு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் வைத்து விசாரித்தபோது எவ்வித துன்புறுத்தலோ அச்சுறுத்தலோ இன்றி அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றையதினம் 16.30 மணிக்கு எதிரி காட்டுராஜா என்பவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.6, அதன் தொடர்ச்சியாக வேறு ஒரு வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு வயதான அம்மாவிடமிருந்து பறித்த 4 பவுன் தங்க செயினை மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார் அதை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றையதினம் 18.30 மணிக்கு ராஜேஷ் என்பவர் தானாக முன்வந்துகொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் பதிவு செய்தும், அதன்தொடர்ச்சியாக ராஜேஷ் என்பவர் அரிட்டாபட்டியில்அவரது வீட்டிலிருந்து ஆஜர் செய்த 17.03.10ம் தேதி 01 மணிக்கு இரண்டரைபவுன் செயினை அறுந்துபோன நிலையில் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதே தேதியில் அதே சாட்சிகள் முன்னிலையில் 20.30 மணிக்கு முருகன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.7, பின்னர் முருகன் ஆஜர் செய்த வேறு வழக்கு சம்மந்தமான டி.என்.58 ஜெ 8870 என்ற பதிவெண்கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். 22.30 மணிக்கு வீரணன் என்ற கவாஸ்கர் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன், அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.8 ஆகும். பின்னர் எதிரிகளையும் வழக்கின் சொத்துக்களையும் நிலையம் கொண்டுவந்து வழக்கின் புகார்தார் மல்லிகா புரோவை வரவழைத்து எதிரிகளையும், வழக்கு சொத்தையும் அடையாளம் காண்பித்தபின் கூடுதல் வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளையும் வழக்கு சொத்துக்களையும் தக்க வழிக்காவல்மூலமும், படிவம் 91 மூலமும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ. 9 ஆகும். இவ்வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. கிருஷ்ணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வழக்கில் எதிரிகள்மீது வழக்கு விசாரணை முடித்து 05.04.10ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.